DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.86/2022**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சார்லஸ் | | : |
| த/பெ | : ஜெயக்குமார் | மதம் | : |
| கிராமம் | : முகப்பேர் | தொழில் | : Security Man power |
| வட்டம் | : சென்னை | வயது | : 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 10.04.2026**

**குறுக்கு விசாரணை: PW1**

1. நான் 13/06, பன்னீர் நகர், முகப்பேர் West ல் வசித்து வருகிறேன். நான் கடந்த 15 ஆண்டுகளாக Security Bureau (Man power) வைத்து நடத்தி வருகிறேன். அது முறையே பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. Security Bureau (Man power) செய்து வரவேண்டும் என்றால் மைுறேயே அரசு அனுமதி பெறவேண்டும் என்ற விதி உள்ளது என்றால் சரிதான், தெரியும். அவ்வாறு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த ஒரு Security Bureau (Man power) நடத்தவில்லை என்றும் வேலூரில் ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் Bouncer ஆக வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரி 6 ஆண்டுகளாக பழக்கம். எவ்வாறு எதிரி பழக்கம் என்றால் சரவணன் என்பவர் மூலம் பழக்கம், சரவணன் வேலச்சேரியில் Nuts Import and Export வியாபாரம் செய்து வருகிறார். வேலச்சேரியில் சரவணன் வைத்துள்ள கடை முகவரி தெரியாது அங்கு நான் வேலை பார்க்கவில்லை சரவணன் என் நண்பர் ஆவார். புகார் மனுவில் Finance நிறுவனம் வைத்து நடத்தி வருவதாகவும், பலவித வியாபாரம் செய்து வருவதாக தெரிவித்துள்ளேன்

என்றால் அவ்வாறு எதுவும் கூறவில்லை. புகார் மனு பத்தி 3 ல் Finance தொழில் செய்து வருவதாக காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். Finance வியாபாரம் எந்த பெயரில் எங்கு வைத்து நடத்தி வருகிறேன் என்றால் பெயர் இல்லை. அதன் உரிமையாளர் நான் ஆவேன். ஒரு நிதி நிறுவனம் நடத்த வேண்டும் என்றால் சட்டப்படி விதிமுறைகள் கடைபிடிக்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. நிதி நிறுவனம் கடந்த 7 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். நிதி நிறுவனத்தில் நான் மட்டும் தான் உரிமையாளர் பங்குதாரர் யாரும் கிடையாது. எதிரி செல்லசாதனா எவ்வாறு தெரியும் என்றால் பணம் வாங்கும் போது எதிரியும் அவரது மனைவி செல்லசாதனாவும் வந்திருந்தார்கள். எதிரியின் மனைவி குறித்த விவரம் தெரியும். எதிரியின் மனைவி செல்லசாதனா வியாபாரம் ஏதேனும் செய்து வருகிறார் என்றால் இல்லை, இல்லத்தரசி ஆவார். செல்லசாதனா வசதியானர்கள் என்ற விவரம் தெரியும். செல்லசாதனாவிற்கு சென்னையிலும் வேலூரிலும் வீடு, நிலம் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் நிலம் இல்லை, சென்னையில் மட்டும் வீடு உள்ளது. செல்லசாதனாவிற்கு வேலூர் தான் பூர்விகமான இடம் என்று தெரியுமா என்றால் தெரியும். செல்லசாதனா வேலூரில் வசதியானர் என்றும் அங்கு பல நிலமும் வீடுகளும் அவர் பெயரில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆகையால் செல்லசாதனா என்னிடம் கடன் வாங்கும் அளவிற்கும் வசதி குறைவும் அவசியமும் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது புகார் மனுவில் சாய்பிரகாஷ் மற்றும் செல்லசாதனா எவ்வளவு பணம் வாங்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் ரூ.12,50,000/- இருவரும் சேர்ந்து வாங்கியுள்ளார்கள் என்று தெரிவித்திருந்தேன். அந்த தொகை எதற்காக வாங்கினார்கள் என்றால் அவர்களின் மகள் திருமண செலவிற்கு

வாங்கினார்கள். 03.04.2020 ஆம் தேதி ரூ.12,50,000/− ரொக்க பணமாக இருவருக்கும் சேர்த்து தான் கொடுத்தேன். மேற்படி தொகை ரூ.500/− தாள்களாக தான் கொடுத்தேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. Security Bureau நடத்தி வருவதாக தெரிவித்திருந்தேன் மேற்படி ரூ.12,50,000/− ரொக்க பணமாக கையில் வைத்திருந்தேனா என்றால் வேலூரில் சொத்து விற்ற பணம் வைத்திருந்தேன். புகார் மனுவில் சொத்தை விற்று தான் பணத்தை எதிரிகளுக்கு தந்தேன் என்று தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

3. Finance நிறுவனம் நடத்தி வரும் பொழுது எதற்காக சொத்தை விற்றேன் என்றால் Finance நிறுவனம் தொடங்குவதற்காக வேலூரில் உள்ள சொத்தை விற்பனை செய்தேன். 7 ஆண்டு காலமாக நிதி நிறுவனம் நடத்தி வருவதாக தெரிவித்திருந்தபோது 2020 ல் சொத்தை விற்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல, 2019 ல் தான் சொத்தை விற்றேன். எண்.1, ஆட்டோ நகர், பெருமலை, வேலூர் மாவட்டத்தில் உள்ள சொத்தை நான் விற்றேன். அதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். என்னிடம் வேலூரில் சொத்தும் இல்லை, நிதி நிறுவனமும் இல்லை என்றும், ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஆகையால் தான் எந்த விவரமும் புகார் மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் அப்போது எனக்கு இதெல்லாம் சொல்ல வேண்டும் என்று தெரியாது, தேவைப்பட்டால் ஆவணம் தாக்கல் செய்கிறேன். எதிரிகளின் மகளுக்கு திருமணம் எப்பொழுது நடந்தது என்றால் மடிப்பாக்கத்தில் உள்ள மண்டபத்தில் 2020 திருமணம் நடந்தது. திருமண அழைப்பிதழ் கொடுத்தார், நான் செல்லவில்லை. நான் 03.04.2020 ல் எதிரிகளுக்கு பணம் கொடுத்ததாக புகார் மனுவில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

எதிரியின் மகளுக்கு 19.01.2020 ல் திருமணம் நடந்தது என்றும் அந்த விவரம் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் பணம் வாங்கி திருமணம் நடத்த வேண்டும் என்ற அவசியம் எதிரிகளுக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் எவ்விதத்திலும் எதிரி செல்லசாதனா பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றும் அவர் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல.

4. பணம் கொடுக்கும் போது என்ன ஆவணம் எதிரிகளிடம் இருந்து எழுதி வாங்கினேன் என்றால் எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை 1 மாதத்தில் வாங்கிய பணத்தை திருப்பி தருவதாக தெரிவித்தார்கள். எனது புகார் மனுவில் கடன் கொடுத்த சமயத்தில் காசோலையும், கடன் உறுதி சீட்டுகள் எதிரிகள் எழுதி கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் பணம் கொடுத்து 4 மாதம கழித்து தான் எதிரிகள் வீட்டிற்கு சென்று கடன் உறுதி சீட்டும், காசோலையும் வாங்கி வந்தேன். நான் Finance தொழில் செய்து வந்திருந்தாலும் யாரும் பாதுகாப்பு ஆவணம் இன்றி பணம் தரமாட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதற்காக நான் எதிரிகளிடம் ஆவணம் எதுவும் வாங்கவில்லை என்றால் நம்பிக்கையின் பேரில் தான். மாதம் ரூ.25,000/- வட்டிக்கு தான் ரூ.12,50,000/- ம் கடன் கொடுத்தேன். ரூ.100 க்கு 2% வட்டி கணக்கில் கடன் கொடுத்தேன். நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்ததாக சொல்லும் பொருட்டு வட்டித்தொகை எதற்காக தரப்பட்டது என்றால் எதிரி மே, ஜீன், ஜீலை, ஆகஸ்ட் 2020 ல் வட்டி பணம் என் வங்கி கணக்கிற்கு செலுத்தினார். வட்டி தொகை செலுத்தியதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 19.01.2020 ஆம் திருமணம் முடிந்து விட்டதால் திருமணத்திற்காக பணம் கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றும் நான் எந்த பணமும் எதிரிகளுக்கு தரவில்லை என்றால் சரியல்ல.

S.K.மோகன் தெரியுமா என்றால் தெரியாது. S.K.மோகன் என்பவர் ஒரு நிலக்கிழார் அவரிடம் நான் முகவர் மற்றும் Bouncer ஆக வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல, அவர் யார் என்று தெரியாது. எதிரி சாய்பிரகாஷ் S.K.மோகன் என்பவரிடம் திருமணத்திற்காக கடன் வாங்கியது உண்மை என்றும் அவரிடம் கொடுத்த காசோலை என்றும், எனக்கு எவ்விதத்திலும் எதிரிகள் பணம் தர அவசியம் இல்லை என்றால் சரியல்ல, எனக்கு தந்த காசோலையாகும்.

5. காசோலையை உள்ள கையெழுத்து எதிரியுடையது. காசோலையில் உள்ள விவரமும், கையெழுத்தும் எதிரி தான் நிரப்பி கொடுத்தார். காசோலையில் உள்ள விவரமும் கையெழுத்தும் நானே நிரப்பி கொண்டேன் என்றால் சரியல்ல. கடன் பத்திரம் எதுவும் எழுதி தரவில்லை என்றால் சரிதான். புகார் மனு பத்தி 4ல் கடன் உறுதி சீட்டு எழுதி கொடுத்ததாக தெரிவித்திருந்தால் அது தவறாகும். அவ்வாறு இரண்டு எதிரியுமே எந்த ஒரு கடன் உறுதி சீட்டும் தரவில்லை என்றால் சரிதான். 28.12.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பு.சா.ஆ.4 ல் இரு எதிரிகளும் சேர்ந்து வட்டிக்காக பணம் வாங்கியதாகவும், கடன் உறுதி சீட்டு எழுதி கொடுத்ததாகவும், தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.3,50,000/- வட்டித்தொகை உடன் அசல் தொகை ரூ.12,50,000/- சேர்த்து மொத்தத்தொகை ரூ.16,00,000/- ஆக காண்பித்துள்ளேன் அதை ரூ.8,00,000/- ஆக இரண்டு காசோலை வழக்கில் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூ.2,00,000/- த்திற்கு மேல் கடன் தொகை தரகூடாது என்றும் அவ்வாறு கொடுத்தால் காசோலை மூலமாகவோ DD மூலமாக தான் தரவேண்டும் என்ற விதிமுறை தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் தெரிவித்துள்ள தொகை என்னுடையது அல்ல என்றும் S.K.மோகன் தெரிவித்ததின் பேரில அவரிடம் இருந்த காசோலையை

வைத்து எதிரியை பழிவாங்க வேண்டும் என்று இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் S.K.மோகன் இடம் வேலை பார்த்ததாலும் அவர் சொன்னதின் பேரில் எதிரியை பழிவாங்க வேண்டும் காசோலை நானே நிரப்பி வங்கியில் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் 03.04.2020 கொரோனா காலம் என்றால் சரிதான், அக்காலகட்டத்தில் வெளியே செல்ல அனுமதி இல்லை என்றால் சரிதான். அச்சமயத்தில் பணம் எடுத்து செல்லவும், வங்கி செல்லவும் அனுமதி தடை செய்யப்பட்டது என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். விவரம் தெரிந்தும் எதிரியும் அவரது மனைவியும் ரூ.500/— தாள்கள் கொண்ட ரூ.12,50,000/— வாங்கி சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு வேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K